# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1225/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துக்கிருஷ்ணன் | த-பெ | சங்கரன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 54/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கேபிள் டிவி ஆப்ரேட்டர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025

**எதிரி ஆஜர்**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கேபிள் டிவி ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எந்த ஒரு விபத்து சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை. பொய் சாட்சியம் அளித்தால் என்றால் தண்டனை உண்டு என்று எனக்கு நன்றாக தெரியும். யாருக்கு விபத்து நடந்து என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 27.02.2019 அன்று மதியம் 2 மணியளவில் சக்திவேல், ஆறுமுகம், கண்ணன் ஆகியோர்களுடன் செல்வ விநாயகர் கோவில் காரைக்குடி கேஎம்ஜே பேக்கரியில் டீ க்குடித்து கொண்டிருந்தபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த டிஎன்65 ஏ எப் 7770 HERo Splendor என்ற இருசக்கர வாகனத்தை தனக்கு தெரிந்த குமார் என்பவர் ஓட்ட பின்னால் ரத்தினம் என்பவர்அமர்ந்து வந்ததாகவும் சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் நாய் ஒன்று குறுக்கே வந்ததால் குமார் என்பவர் பிரேக் போட்டதால் நிலைதடுமாறி இருவரும் விழுந்து விட்டார்கள் என்றும் சென்று பார்த்தபோது ரத்தினம் என்பவருக்கு கரண்டைக்காலில் காயம் ஏற்பட்டு நினைவு இன்றி இருந்தார் என்றும் அவருடைய தம்பிக்கு செல்போன் மூலம் தெரிவித்து சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததால் இந்த விபத்து நடந்ததாக நேரடியாக பார்த்த சம்பவத்தை மறைத்து தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.07 12:46:46 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி